தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்
CSI Tamil Parish Al-Ain, UAE

# மன்னா..




எப்பிராத்தா... எண்ணப்பட்ட பெத்லகேமே,
நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே
சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப் போகிறவர்
உன்னிடத்தில் இருந்து புறப்பட்டு என்னிடத்தில்
வருவார்; அவருடைய புறப்படுதல் அனாதி
நாட்களாகிய பூர்வத்தினுடையது. மீகா/Micah 5:2

பொழிவு: 13
ஆகாரம்: 12
DEC '2021

2021

# Christmas Schedule

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA



**10th Dec'21 @ 6:15 PM**
**CBS Christmas Program**

**17th Dec'21 @ 6:15 PM**
**Christmas Carol Service**

**24th Dec'21 @ 6:15 PM**
**Sing Song Service**

**25th Dec'21 @ 5:30 AM**
**Christmas Service**

DECEMBER 31

CHAIN PRAYER

12 Hours

# போதகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

பெத்லகேமில் பிறந்த நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு பெயரில் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புதிய ஆண்டு- 2022, நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்,
பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும்
உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். லூக்கா 2:14

**"GLORY TO GOD IN THE HIGHEST, AND ON EARTH PEACE AMONG THOSE WITH WHOM HE IN PLEASED!" LUKE 2:14**

மேசியாவின் பிறப்பு: இயேசுவின் பிறப்பின் வருகை உன்னதத்தில் இருந்து பூமிக்கு சமாதானம் வந்துவிட்டது என்பதை தேவதூதர்கள் அறிவித்தார்கள்....

கிறிஸ்து வருகை: உன்னதத்திலிருந்து பூமிக்கு மீட்பும், சந்தோஷமும் (மகிழ்ச்சி) வந்துவிட்டது என்பதை தேவதூதர்கள் அறிவித்தார்கள். இந்தச் செய்திகள் ஆண்டவர் நம் அருகில் இருக்கிறார் நமக்கு சமாதானத்தையும், மகிழ்ச்சியும் கொடுக்க பிறந்தார் என்பதை உணர்ந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம்....

அட்வென்ட்(Advent): திருச்சபை குடும்பங்களாக நாம் கிறிஸ்து பிறப்பின் நாளை எதிர் நோக்கி காத்திருக்கும் காலம் இந்த அட்வென்ட் காலம் ஆகும். இந்த காலம் மகிழ்ச்சி, சமாதானம், அன்பு, இரக்கம் இவைகளை மையமாகக்கொண்டு கிறிஸ்து பிறப்பின் நாளை கொண்டாட ஆயத்தப்படும் இந்த நாட்களில் இந்த அட்வென்ட் காலங்கள் இவைகளை நினைவுகூர்ந்து அனுசரிக்க அழைக்கப்படுகிறோம். இது ஆண்டவர் இயேசுவின் வருகையை எதிர்நோக்கும் காலமாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மேசியாவின் வருகையை மிகுந்த ஆவலோடு இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்பு அவர்களின் விடுதலைக்கான எதிர்பார்ப்பாக இருந்தது. யூதர்களுக்கு விடுதலை அளிப்பவர் மேசியா என்று நம்பி எதிர்பார்த்தனர். இதனையே அவர்கள் ஒரு பண்டிகையாக கொண்டாடினார்கள்.

இந்தக் கொண்டாட்டத்தை தீர்க்கதரிசிகள் ஒரு நற்செய்தியாக அறிவித்தார்கள். அந்த நற்செய்தி என்னவெனில் வரப்போகின்ற மேசியா உலக மக்களின் வாழ்விற்கு விடுதலை அளிப்பவர், மகிழ்ச்சியும், சமாதானத்தையும் கொடுப்பவர் என்ற நற்செய்தியாக இருந்தது.



அது கொண்டாட்டத்தின் நற்செய்தியாகும் (Celebrating the Good News) நாமும் கிறிஸ்து பிறப்பின் நாளை கொண்டாட ஆயத்தப்படும் இந்த நாளில் இந்த அட்வென்ட் காலங்கள் நமக்கு கொடுக்கும் அறைகூவலை ஏற்று கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை கொண்டாட திருச்சபை குடும்பமாய் அழைக்கப்படுகின்றோம்......

கிறிஸ்மஸ்: இந்த மாதம் முழுவதும் கிறிஸ்து பிறப்பின் திருநாளை திருச்சபை குடும்பமாய் கொண்டாட அழைக்கப்படுகிறோம். கடந்த ஆண்டுகள் பல்வேறு சூழல்களில் குறிப்பாக இந்த Covid-19 -இன் மூலமாக பல தடைகள் இருந்தது அவைகளை கடந்து வரும் அனுபவங்களை ஆண்டவர் நமக்கு கொடுத்து,அவர் தந்திருக்கிறா நல்ல விடுதலைக்காக ஆண்டவரை துதிக்க அழைக்கப்படுகிறோம். தொடர்ந்து நமது திருச்சபையில் அனைத்து கிறிஸ்து பிறப்பின் நிகழ்வுகளை ஜெபத்துடன் ஒழுங்கு செய்ய இருக்கிறோம். அதற்கான ஒழுங்குகளை திருச்சபையின் ஐக்கிய சங்கத்தினர், பாடகர் குழுவினர் மற்றும் நமது திருச்சபையின் சிறு பிள்ளைகள் வழியாக நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் ஜெபத்துடன் பங்கெடுத்து உங்களது நிகழ்ச்சிகளையும், ஆதரவையும் அளிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகிறிர்கள். அத்துடன் வருகின்ற புதிய ஆண்டு-2022- க்காக நம்மை அர்ப்பணிக்கவும், ஆயத்த படவும் ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். அதற்காக இந்த ஆண்டின் இறுதியில் ஒழுங்கு செய்யப்படும் சங்கிலி ஜெபத்தில் அனைவரும் பங்கெடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்...

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, புதிய ஆண்டிற்குள் புதிய மாற்றங்களைத் தந்து பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கிறோம். இந்த கோவிட் காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குறிப்பாக வேலை இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் Zoom வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, திருச்சபையின் குடும்பங்களுக்காக, பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக... உயர் கல்விக்கு சொல்லுகின்ற நமது பிள்ளைகளுக்காக ஜெபிக்கவும் வாழ்த்தவும் அழைக்கப்படுகிறோம். அத்துடன் நமது திருச்சபையில் வருகின்ற காலங்களில் நடக்க இருக்கின்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்காக குறிப்பாக கிறிஸ்து பிறப்பின் நாளின் நிகழ்ச்சிகளுக்காக ஜெபிக்குமாறு அழைக்கப்படுகிறோம்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர.

*Rev. S. P. Baskar....*



# நம்மிடையே வருகின்ற ஆண்டவர்

## மேசியா



மீகா 5:1-9.
வெளி 21:1-5
யோவான் 1:1-14

### முன்னுரை

கிறிஸ்து பிறப்பு என்பது வெறும் கொண்டாட்டமாக மட்டும் இல்லாமல் ஒரு அனுபவமாக புரிந்துகொள்ள, விசுவாசிக்க அழைக்கப்படுகிறோம். மேசியாவின் வருகை என்பது இறையரசின் மறுவாழ்வு குரியது என்பதை புரிந்து கொள்ளவும் அதனை மையமாக வைத்து மேசியாவின் வருகையை என்பது நாம் எதிர்நோக்கி இருக்கும் வாழ்வின் அவசியத்தை புரிந்துகொண்டு உண்மையுள்ள அர்த்தமுள்ள நீதியை, உண்மையை, சமத்துவத்தை நிலைநாட்ட மேசியா இந்த உலகத்திற்கு வந்தார் என்பதை உணர்ந்து கொள்வதே கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டம் ஆகும்.

### மேசியாவின் வருகை: உலக ஆற்றலை மாற்றுவதற்கான அழைப்பு

மீகா:5:1-9

மேசியா வருகின்றார் என்கிற நற்செய்தி தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வில் அதிர்வுகளையும், மாற்றத்தையும் ஏற்படுத்தியது. அந்தச் செய்தியை தான் மீகா தீர்க்கதரிசி முன் அறிவிக்கிறார். அசீரிய படையெடுப்பினால் துவண்டு கிடந்த மக்களுக்கு மேசியாவின் வருகை முன்னறிவிக்கப்படுகிறது. அசீரிய படைகளுக்கு முன்னாள் எதிர் நிற்க கூடிய வலிமையும், ஆற்றலும் இஸ்ரவேலுக்கோ அல்லது வேறு ஏதேனும் அரசுக்கோ அன்றைக்கு இல்லை. அன்றைக்கு அறியப்பட்ட உலகத்தில் பேராற்றல் மிக்க அரசு அசீரியா அரசாக காணப்பட்டது. ஆனாலும் மேசியா பெத்லகேமில் இருந்து வெளிப்படுவார் என்ற செய்தி அறிவிக்கப்படுகிறது. பெத்லேகேம் என்பது சிறிய ஊராக இருந்ததோ, அதுபோல மேசியாவின் வருகையும் அவரது அரசின் துவக்கமும் எளிமையானதாக சாதாரணமாகத் தான் தோன்றும். ஆனால் அவரது வருகை என்பது முடிவில்லாத நிலையான அரசாக மேசியாவின் அரசு இருக்கும். ஏனெனில் அசீரிய அரசு உட்பட எந்த ஒரு அரசும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் மறக்கப்பட்டு போயின, ஆனால் மேசியாவின் அரசு என்றைக்கும் முடிவில்லாமல் நிலைத்து நிற்கும் என்று உறுதியளிக்கப்படுகிறது.

மெசியாவின் அரசு என்பது அரசாக அமையும் பெலமுள்ளவர்கள், அதிகாரமுள்ளவர்கள், பெரும்பான்மையானவர்களின் அரசாக இல்லாமல் எஞ்சியோரின் அரசாக அதாவது சிறியவர்களின் அரசாக இருக்கும் என்று

மீகா தீர்க்கதரிசி மூலமாக வாக்களிக்கப்படுகிறது. மேசியாவின் அரசு பலத்தை பிரயோகம் செய்கிற அரசாக இல்லாமல் இறை பலத்தோடு அதாவது அடக்கி ஆளுகிறவர்களாக இல்லாமல் அன்புடனும், சமத்துவத்துடணும் அனைவரையும் ஏற்றுக்கொண்டு அரவணைத்து செல்லுகின்ற அரசாக விளங்கும் என்று சொல்லப்படுகிறது. தொடர்ந்து அசீரியாவின் வீழ்ச்சியினைக் குறித்து மீகா இங்கு உழைக்கிறார் (மீகா:5:5-6) அசீரியர் எவரும் வீழ்த்த இயலாத அரசாக இருந்தாலும் அது வீழ்த்தப்படும். அந்நியர் அசீரியாவை கைப்பற்றுவர் என்றும் ஆண்டவரின் தீர்ப்பு வெளிப்படுகிறது. ஆண்டவரின் இந்த தீர்ப்பு, எவர் தம் வலிமையில் நம்பிக்கை கொண்டு சாதாரண மக்களுக்கும், ஆதரவற்றோருக்கும் எதிராக அல்லது விரோதமாக செயல்படுகிறார்களோ அங்கே கடவுளின் நீதி அவர்களுக்கு எதிராக செயல்படும் என்பதை இங்கு வலியுறுத்தப்படுகிறது. எனது மேசியாவின் வருகை என்பது உலக ஆற்றலை மாற்றுவதற்கான வகையாக இருந்து சிறியோர்கள் மற்றும் எளிமையானவர்களின் வாழ்வுக்கு அழைப்பாக இருக்கிறது....

## மேசியாவின் வருகை: புதிய அமைப்புக்கான அழைப்பு

வெளி:21:10-29

யோவானின் திருவெளிப்பாடு: 21:1-4 வரப்போகும் இறையரசின் மூலம் ஏற்பட இருக்கும் மாற்றங்களை எடுத்துரைக்கிறது. பழைய வானமும், பழைய பூமியும் ஒளிந்து புதிய வானமும், புதிய பூமியும் அங்கே உருவாக்கப்படுகின்றன. ஆனால் மறைந்துப்போகும் பழைய பூமியும், பழைய வானமும் அழியாமல் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டு மீண்டும் புதிய நடைமுறைகளுடன் செயல்பட இருப்பதையே குறிக்கிறது. ஆதியிலே மிக நேர்த்தியாக படைக்கப்பட்ட இந்த பூமியானது மனுக்குலத்தின் பேராசையாலும், சுயநலத்தினாலும் கடவுள் படைத்த இந்த வானத்தையும், பூமியையும் சீர்குலைத்து போட்டார்கள். இதனால் சிறுமைப்பட்டவர்கள் வறுமையிலும், வாழ்வின் எல்லா நிலையிலும் பாதிக்கப்பட்டு தள்ளப்பட்டார்கள். இந்த நிலையில் மேசியாவின் வருகையை என்பது புதிய உலக ஒழுங்கான அழைப்பாக அமைகிறது. அரியணையில் வீற்றிருக்கிறார் மேசியா அனைத்தையும் புதிதாக மாற்றுகின்றனர் என்ற நற்செய்தி சொல்லப்படுகிறது. இந்த புதிய மாற்றமான அமைப்பின் மூலமாய் ஒழுங்கு முறைகள் பழையவைகள் ஒழிந்து புதிய உலகை ஆண்டவர் ஏற்படுத்துகிறார். இந்தப் புதிய உலகில் அனைத்து மக்களும் ஒன்றாக இருப்பார்கள். இங்கு அனைவரும் கூடி வாழ்வார்கள் சுயநலம் இருக்காது, அனைவரும் ஒன்றாக மதிக்கப்படுவார்கள். இங்கு சிறியோர், தாழ்ந்தோர், உயர்ந்தோர் என்ற பாகுபாடு இருக்காது. கடவுளில் எண்ணத்திற்கு எதிரான தீய செயல்கள் அங்கு இருக்காது. தீய எண்ணம் கொண்டோர் அங்கு இருக்க மாட்டார்கள். எல்லோரும் கடவுளின் பிள்ளைகளாக உண்மையோடும்,

சமாதானத்தோடும், சமத்துவத்தோடு பகிர்ந்து வாழ அழைக்கப்பட்டவர்களாக இருக்க அழைக்கப்படுகிறோம். இந்த மாற்றத்தை ஏற்படுத்தவே மேசியாவின் வருகை அமைகிறது என்பதை புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்..

**மேசியாவின் வருகை: வாழ்வளிக்கும் வார்த்தையில் நம்பிக்கை கொள்ள அழைப்பு..** யோவான்: 1:1-14

உலகமும் அதிலுள்ள யாவும் உருவாகுமுன்னே இந்த உலகமனைத்தையும் உருவாக்கின வார்த்தை மறுபடியும் மனிதரை சந்திக்க, மறுபடியும் மனித உருவில் வந்து சென்றதை யோவான் நற்செய்தியாளர் நினைவுபடுத்துகிறார். வார்த்தை தன்னகத்தே வாழ்வு கொண்டதாயிருந்தது. அந்த வாழ்வைக் கொண்டு அனைத்து வாழும் உயிரினங்களுக்கும் உண்டாக்கப்பட்டன. உலகமனைத்தும் அவரோடு இணைந்தோம் அவரிடமிருந்து பிரிக்கப்பட முடியாமல் இணைந்தும் இருந்தது. வார்த்தை மனிதருக்கு ஒளியை அளித்தது. ஏனெனில் ஒளியற்ற சூழலில் மனிதன் நிலை தவறி கடவுளின் திட்டத்தில் இருந்து விலகாத படி அவர்களை பாதுகாக்கும் மற்றும் வழி நடத்தும் ஒளியாக வார்த்தை இருந்தது. ஆனால் ஒளியை வெறுத்து இருளோடு தம்மை இணைத்துக்கொண்ட மனிதர் இருந்தனர். அவர்கள் ஒளிகுரிய செயல்களான அன்பையும்,நீதியையும், சமாதானத்தையும், சமத்துவத்தையும் மறந்து போயினர். அவர்கள் இருளுக்கு உரிய காரியங்களான பெருமைகள், சுயநலம், நீதியற்ற செயல்கள், பொய்யான வாழ்க்கை இவற்றில் ஈடுபட்டனர். இந்த வாழ்விலிருந்து ஒளியேற்ற வாழ்வுகுள்ளாக வாழ ஆண்டவர் நம்மை அழைக்கிறார். ஒளிகுரிய வாழ்வு என்பது சவால்களும், போராட்டங்களும் நிறைந்தது. இந்த நிலையில் ஆண்டவரின் வாழ்வு தரும் வார்த்தையின் மீது நம்பிக்கை கொள்கிற அனைவரும் ஒளிகுரிய வாழ்வைப் பெற்று நிலையான வாழ்வினை பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம். எனவே மேசியாவின் வருகை என்பது வாழ்வளிக்கும் வார்த்தையின் மீது நம்பிக்கை கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம்...

இப்படிப்பட்ட புரிதலோடு கிறிஸ்து பிறப்பின் நாளை அர்த்தமுள்ள மேசியாவின் வருகையின் நோக்கத்தை புரிந்துகொண்டு கொண்டாட அழைக்கப்படுகிறோம்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

மேசியாவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்......

*Rev. S.P.Baskar......*

A VERY MERRY
CHRISTMAS
and Happy New Year !



# மரியாள்

## அற்பணிப்பின் அடையாளம்: இயேசுவின் தாய்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

உங்கள் அனைவருக்கும் இயேசு பாலன் கிறிஸ்துவின் திருப்பெயரில் என் அன்பின் கிறிஸ்மஸ் & புதிய ஆண்டு-2022 வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**முன்னுரை:**

கிறிஸ்து பிறப்பின் நாளை கொண்டாடுகின்ற நமக்கு இந்த காலங்கள் மிகவும் சிறப்பான நாட்களாகும். இந்த காலத்திற்கு அட்வெண்ட் காலங்கள் என்று அழைக்கப்படுகின்றோம். இது கிறிஸ்து வருகையின் காலம் என்றும் சிந்திக்க அழைக்கப்படுகிறோம். இது மகிழ்ச்சியின் காலம், கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை கொண்டாடும் காலம் ஆகும். இந்த நற்செய்தியை கொண்டாடுவதற்கு அடிப்படையாய் இருந்த இயேசுவின் தாய் மரியாளை சிந்திக்கவும், அவருடைய அற்பணிப்பை நினைவு கூறவும் அழைக்கப்படுகிறோம்...

**மரியாளின் வாழ்க்கை:**

மரியாள் ஒரு கன்னிப்பெண்..

நாசரேத் என்று ஊரில் வாழ்ந்தவர்...

திருமணத்திற்காக நிச்சயிக்கப்பட்டடு,(யோசேப்புடன்)

திருமணத்திற்காக காத்திருப்பவர்.... இப்படிப்பட்ட மரியாளுக்கு தேவதூதர் வந்து; மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. (லூக்கா:1:30,31)

இந்தச் செய்தி மரியாளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது காரணம், இது யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு நிலை, சமுதாயத்தில் நடக்கக்கூடாத ஒரு காரியம், கன்னிப்பெண் மரியாள் கர்ப்பவதியாவது ஒரு ஏற்றுக் கொள்ளாத சூழல் ஆகும். இந்த சூழலில் மரியாள் தன்னை அர்ப்பணித்தார்....



**மரியாளின் அற்பணிப்பு:**

...அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். லூக்கா:2:7

And she brought forth her firstborn Son, and wrapped Him in swaddling clothes, and laid Him in a manger, because there was no room for them in the inn. Luke 2:7

...அவன்(ர்)எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப் போய்... மத்தேயு:2:14

When he arose, he took the young Child and His mother by night and departed for Egypt. Matthew 2:14

இந்த இரண்டு நற்செய்தி பகுதிகளும் மரியாளின் அர்ப்பணிப்பின் வாழ்வை நமக்கு எடுத்து காண்பிக்கின்றது. கன்னியின் வயிற்றில் கருத்தரிப்பது என்பது இதுவரை கேள்விப்படாத ஒரு நிகழ்வு ஆகும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மரியாள் தன்னை அர்ப்பணித்து உலக மீட்பரை பெற்றெடுக்க தன்னை முழுமையாய் ஒப்புக் கொடுக்கிறார்.

"இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்". (லூக்கா:1:38)

இது ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தன்னை மரியாள் அர்ப்பணிப்பதின் அடையாளமாக புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் சத்தம் கேட்டவர் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற தன்னை அர்ப்பணித்தார்...

**மரியாளின் அர்ப்பணிப்பின் மூலம் பெரும் அடையாளங்கள்:**

* மரியாள் ஒரு தெய்வீக தாயாக அடையாளப் படுத்தப் படுகிறார்...
* மரியாள் ஒரு தெய்வீக ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்கிறார்....
* மரியான் ஒரு தெய்வீகமான குழந்தையை (மீட்பர்) பெற்றெடுக்கிறார்...
இதுவே மரியாளின் அற்பணிப்புக்கான அடையாளங்களாகும்...

இன்றைக்கு இப்படிப்பட்ட அர்ப்பணிப்புடன் கிறிஸ்து பிறப்பின் நாளை கொண்டாடவும், கிறிஸ்து பிறப்பின் அன்பை, மகிழ்ச்சியை, நற்செய்தியாக பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் அழைக்கப்படுகிறோம்...

பெத்லேகேம் பாலகன் ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயரம்மா...

*Mrs. Nancy Baskar*



# செயலர் மடல்...

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே...

உயர்ந்த மேன்மையை உதறிதள்ளி, மாட்டு கொட்டினில் பாலகனாய் மண்ணில் அவதரித்த இயேசுவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் அன்பின் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை சபை குழுவின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்னல் வேகத்தில் பதினொரு மாதங்களை கடந்து பன்னிரெண்டாவது மாதத்திற்குள் நுழைந்துவிட்டோம்... கடந்து வந்த பாதைகள் கரடுமுரடானவைகள்தான். நாம் சோர்ந்து போன நேரத்தில் கரம்பிடித்து, கண்ணீரின் பாதைகளில் அரவணைத்து, தனிமையிலே துணைநின்று ஆறுதல் கரம்நீட்டி, மகிழ்ச்சியினால் நிரப்பின கர்த்தரை நன்றியுடன் துதிப்போம். மீண்டும் ஒரு பண்டிகை காலத்தை மகிழ்ச்சியுடன் காணச்செய்த தேவனை போற்றிப்பாடுவோம். கிறிஸ்து பிறப்பு பண்டிகை காலத்தின் ஆராதனைகளிலும் சிறப்பு நிகழ்வுகளிலும் பங்கேற்க, ஆயத்தப்பட கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் அருள் புரிவாராக. திருச்சபையின் அறுப்பின் ஸ்தோத்திர பண்டிக்கைகாய் உற்சாகமாய் ஒவ்வொரு வாரமும் மதிய/இரவு உணவு வழங்கின ஒவ்வொரு குடும்பத்திற்கும், தாங்கிவருகிற சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும், பொருப்பாளர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் சிறப்பு ஆராதனையில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும், பொருப்புடன் எற்றேடுத்து நடத்தின போதகருக்கும், பொருப்பாளர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சபையின் வளர்ச்சியில் தொடர்ந்து உங்கள் ஆதரவை தாருங்கள். ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறவர், அவர் இன்னும் செய்வார்.

வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், ஈடுபாடும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க, அதிகமாய் ஜெபித்திட வேண்டுகிறேன். அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

இப்படிக்கு...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
**எஸ்.சுரேஷ் ராஜன்**

Merry Christmas




கிறிஸ்துவின் வருகைக்காய் காத்திருக்கும் திருச்சபையே...

யாரை நான் அனுப்புவேன்... யார் எனது காரியமாய் போவார்.. என அழைக்கும் கர்த்தரின் ஆத்தும பாரத்தை உணர்ந்தோராய்.. திருச்சபையாய் ஒன்றிணைந்து நிர்மாணிக்கும் ஆலயத்தின் பணித்தள செய்தியினை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் சிஎஸ்ஐ அல்யென் தமிழ் திருச்சபையின் ஆண்கள் ஐக்கிய சங்கமாய் கர்த்தருக்குள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறுகூட்டமே, பயப்படாதே; நான் உனக்குத் துணைநிற்கிறேன்... என்று கர்த்தரும், இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார்... ஆம்.. ஆண்கள் ஐக்கிய சங்கம் ஒரு சிறு கூட்டம்தான்.. ஆனால் கர்த்தர் துணைநின்றார், நிற்கிறார், நிற்ப்பார் என்ற விசுவாசத்துடன்... இவ்வாண்டு பிப்ரவரி மாதம் ஆண்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் போதகர் இணைந்து நம் திருச்சபையின் சார்பாக ஆலயம் ஒன்று கட்ட வேண்டும் என்று ஜெபத்துடன் முடிவெடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக... இந்தியாவின் வடமாநிலங்களை மையமாக கொண்டு மிஷினரி பணி செய்து வரும் ஒருசில மிஷினரி ஸ்தாபனங்களை தொடர்புகொண்டு அவர்களின் ஆலய தேவைகளை கேட்டு அறிந்தோம். பின்னர்; ஆண்கள் சங்கத்தின் கூடுகையில் இவை விவாதிக்கப்பட்டும், சபை குழுவின் ஒப்புதலோடும்; இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷின் (ICGM) என்ற மிஷனரி ஸ்தாபனத்தின் மூலமாக, ஒரிசா மாநிலத்தின் கோராபுட் மாவட்டம் கொஜ்ரிகோலா கிராம பகுதிகளில்; ஆலயம் கட்ட ஜெபத்துடன் முடிவெடுக்கப்பட்டது.

(ஐசிஜிஎம்) இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷின் என்பது 1978'ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ரெவ.டாக்டர் நாதன் ஜவஹர் ஞானையா'வால் தொடங்கபட்ட ஒர் ஸ்தாபனமாகும். கிறிஸ்துவின் சுவிசேஷம் சென்றடையாத வடமாநிலங்களான சத்தீஸ்கர், ஒடிசா, உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் மக்கள் மத்தியிலே பல்வேறு பகுதிகளில் பல்வேறு மொழிகளில் 100க்கும் மேற்பட்ட வழிபாட்டு குழுக்களை கொண்டும், மேற்கு மற்றும் கிழக்கு கோண்டி மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்ப்பதிலும், ஆலயங்கள் கட்டுவதிலும் இத்ஸ்தாபனம் தீவிரமாக ஈடுபட்டுவருவது மகிழ்ச்சியளிக்கிறது.

கிறிஸ்துவுக்குள் அருமையான திருச்சபையே... நாம் நிர்மாணிக்கும் இவ்வாலயம் இந்தியாவின் பாரம்பரிய தளங்களுக்கும், மிஷனெரிகளின் கல்லறை பூமி எனப் பெயர்பெற்ற ஒரிசா மாநிலத்தில்தான். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு தன்னை அற்பணித்ததால் உயிரோடு எரிக்கப்பட்ட, கொடூர தாக்குதலால் மரணித்த அநேக கோதுமை மணிகள் விதைக்கபட்ட மாநிலம் தான் இந்த ஒரிசா.

கோராபுட் மாவட்டம் தெற்கு ஒடிசாவில் உள்ள பழங்குடியிர் வாழும் ஒரு பகுதியாகும். இதில் கொஜ்ரிகோலா கிராமம் சராசரி கடல் மட்டத்திலிருந்து சுமார் 3000 அடி உயரத்தில் அடர்ந்த காடுகள், மலைகள் மற்றும் நீர்வீழ்ச்சிகளால் சூழப்பட்டுள்ள ஓர்

அழகான கிராமம். ஆனால் கொஜ்ரிகோலா கிராமத்துக்கு செல்லும் சுமார் பத்து கிலோமீட்டர் பாதையோ ஒற்றையடிப் பாதை தான். சவாலான நேரங்களில் மிஷனரிகள் அவ்விடத்தைக் கடந்து ஊழியத்தை நிறைவேற்றி வெளிவருவது எப்போதும் ஒரு சாதனை நிகழ்வுதான்.

சுமார் 60 குடும்பங்கள் கொண்ட இந்த கிராமத்தின் மொத்த மக்கள் தொகை வெறும் 300 மட்டுமே. குவி என்னும் தாய்மொழி பேசும் இந்த 60 குடும்பங்களில் 40 குடும்பங்கள் தற்போது கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். ஆனால்... கொஜ்ரிகோலா கிராமத்தில் ஆலயம் இன்னமும் கட்டபடவில்லை. மரங்களின் நிழல்களும், ஏதாகிலும் ஒரு வீட்டின் முற்றமுமே, இவர்கள் ஆராதனை கூடம். மழைக்காலங்களில் ஆராதனை நடத்துவது கடினமே...

இந்த தேவாலயத்தை கட்டுவதற்கு 4 லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆத்துமா இரட்சிப்பிழந்தவர்காய்... ஆத்தும பாரம் கொண்டோராய்... ஊக்கமாய் ஜெபித்த... உற்சாகமாய் கொடுத்த ஒவ்வொரு கரங்களையும், கர்த்தர் அபரிவிதமாய் ஆசீர்வதிப்பாராக. ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாகவும் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவிக்கிறோம். சவால் நிறைந்த இந்த ஆலய கட்டுமான பணிகளை பொறுப்புடனும் ஜெபத்துடனும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஆண்கள் சங்கத்தின் மூலமாக அதன் மூத்த உறுப்பினரான திரு.நெல்சன் சோபிதராஜ் அவர்களும், நமது சபை போதகர், மற்றும் முன்னாள்- இந்நாள் பொருபாளர்களும்; நியமிக்கப்பட்ட நாளிலிருந்து எடுத்த சீறிய முயற்சிகள் பாராட்டிற்குறியது.

இதுவரை கிடைக்கப்பெற்ற காணிக்கை 3.5 லட்சம் ரூபாய். அதில் 2 லட்சம் ரூபாய் ஆலயத்தின் கட்டுமான பணிக்காக இரு தவணையாக இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அடர்ந்த காடுகளை, மலைப்பாதைகளை கடந்து இத்தேவாலயத்தை நிர்மாணிப்பதில் உள்ள முக்கிய சவால்களான போக்குவரத்து, பொருட்களை கொண்டு செல்லுதல், வேலையாட்கள், மற்றும் பருவகால சவால்களை எல்லாம் இதுவரை கர்த்தர் நம் கரம்பிடித்தால் கடந்து விட்டோம். ஜெபத்திற்கு பதில் தரும் தேவன்; கொஜ்ரிகோலா கிராமம் செல்லுகின்ற ஒற்றையடிப் பாதை; அவ்வரசாங்கத்தால் இப்போது விரிவாகம் செய்யப்பட்டு வருகிறது. கரம்பிடித்தார் கர்த்தர்... என்பதற்கு இதுவே கொஜ்ரிகோலாவில் நம் கண்ட முதற் சாட்சி.

உங்களின் ஊக்கமான ஜெபத்தாலும், உதாரத்துவமான காணிக்கைகளாலும் இவ்வூழியத்தை தாங்கியதன் விளைவாக... கடந்த அக்டோபர் மாதம் 10’ஆம் தேதி ஆலயத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது. கர்த்தருக்கே ஸ்தோதிரம்.. தொடர்ந்து அஸ்திபார பணிகள் முடிவடைந்து தற்போது, சுற்று சுவர் பணிகள் நடைப்பெற்று வருகிறது என்பதை சபைக்கு தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

கிறிஸ்துவுக்குள் அருமையான திருச்சபையே... இன்னும் நாம் செல்ல வேண்டிய தூரமோ.. வெகுதூரம். கிறிஸ்துவின் கரம் நமக்கு முன்சென்று தாங்கும்...நடத்தும்.. தப்புவிக்கும்... என்ற விசுவாசத்துடன் இன்று இப்பணியினை உங்கள் முழு ஆதரவுடன் ஆண்கள் ஐக்கிய சங்கமாய் முன்னெடுத்துச்செல்கிறோம்...

வாருங்கள்... நாம் இணைந்து கட்டுவோம்...
யாரை நான் அனுப்புவேன்... யார் எனது காரியமாய் போவார்..?





# கிறிஸ்துவின் பிறப்பு

அன்பு சகோதர சகோதரிகளுக்கு, விண்ணை விட்டு மண்ணிற்கு இறங்கி வந்த நித்திய ஜீவனை நமக்கு பரிசளித்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்! இந்த மாதம் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையாகும்.

**இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர்**
**உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். லூக்கா 2 : 11**

**இருதயத்தை ஆளவந்தவர்:** "என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்தில் இருந்து புறப்படுவார்" என்பது போல இயேசு இவ்வுலகத்திலுள்ள மக்களின் இருதயத்தை ஆள்பவராக நேற்றும் இன்றும் என்றும் இருக்கிறார். இன்று அவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் "என் மகனே, மகளே உன் இருதயத்தை எனக்குத் தா. உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக" என்பதே "உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்". – ஏசாயா 26:3 வசனத்தின்படி நாம் நம் இருதயத்தை அவருக்குக் கொடுப்போமா? அவர் நம்மை ஆண்டு அற்புதமாய் நடத்துவார். சமாதான பிரபுவாகிய அவர் என்றும் நம் இருதயத்திலும் வாழ்விலும் சமாதானத்தைத் தந்திடுவார்.

**நம்மோடிருக்க உலகத்தில் வந்தவர்:** அவருக்கு **'இம்மானுவேல்'** என்று பேரிடுவார்கள். "இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தமாம். இயேசு கிறிஸ்து எங்கோ தூரத்தில் இருப்பவர், வேடிக்கைப்பார்ப்பவர் அல்ல, அவர் நம்மோடே இருப்பவர். அவர் தடுமாற்றங்களில், குறைவுகளில், பெலவீனங்களில், உபத்திரவத்தில், காயங்களில், கொள்ளை நோய்களில், எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்மோடிருக்கும் ஒரே நாயகன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே அன்றி இவ்வுலகில் யாருமிலர். "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன்" என்றார். – மத்தேயு 28:20(பி) வசனத்தின்படி நாம் நம்முடைய எல்லா சூழ்நிலைகளிலும் இயேசுவையே முதலாவதாக நம்மோடு வைத்துக் கொள்வோம்.

**பாவத்தை மன்னிக்கிறவர்:** இயேசு தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்கிறவர். பாவத்தை மன்னிக்கும் அதிகாரமுடையவர் அவர் ஒருவரே. நமது பாவங்களைச் சிலுவையில் சுமந்தார். சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் பரலோகத்திலும், பூலோகத்திலும் நம்மை ஒப்புரவாக்கினார். "அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாகச் செய்யாமலும் நம்முடைய அக்கிரமங்களுக் கத்தக்கதாக சரிகட்டாமலும் இருக்கிறார்". சங்கீதம் 103:10 இவ்வசனத்தின்படி அவர்

நம்முடைய பாவங்களை மன்னித்து நம்மை நீதிமான்களாக்குகிறவராகவும் இருக்கிறார்.

**சாவுக்குரிய சரீரங்களை உயிர்ப்பிக்கிறவர்:** தாவீது ஜெபித்தது போல "என்னைக் கழுவியருளும்" என்று நாம் அர்த்தமாய் ஜெபிப்போம். பேதுருவைப் பார்த்து "நான் உன்னை கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்கு பங்கில்லை" என்கிறார். "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்" – ஏசாயா 53:4 வசனத்தின் படி பெயரளவில் கிறிஸ்தவராய் இருந்து பாவம் மன்னிக்கப்பட்ட அனுபவம் இல்லையெனில், அவரிடத்தில் நமக்கு பங்கும் இல்லை. அவருடைய ஆசீர்வாதத்தை நாம் அனுபவிக்கவும் முடியாது. இந்நாளில் அவருக்கு நாம் நம்மை முழுமையாய் ஒப்புக்கொடுப்போம்.

**சிறுகதை :** அரசவையில் மந்திரி ஒருவர் தனக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் ராஜாவுக்கு சுவிசேஷம் அறிவித்துக் கொண்டே இருப்பார். ஒருநாள் உலகத்தின் பாவங்களுக்காக, பிதாவானவர் தம்முடைய ஒரேபேறான குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர்தாம் இயேசு கிறிஸ்து. அவர் நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினார் என்றார். இதை ராஜாவால் புரிந்து கொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை. பிதா ஏன் தன்னுடைய சொந்த குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்ப வேண்டும். பரலோகத்தில் தேவ தூதர்கள் இல்லையா? இதை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியாது என்று கூறினார். இதனை விளக்க இராஜாவோடு நடந்து வந்துகொண்டிருந்த அவருடைய மகனை மந்திரி ஒரு பாலத்தைக் கடக்கும் வேளையில் தண்ணீருக்குள் தள்ளிவிட்டார். உடனே இராஜா சற்றும் தாமதிக்காமல் தண்ணீருக்குள் குதித்து தன் மகனைக் காப்பாற்றினார். உடனே மந்திரி, இராஜாவே உங்களுக்குப் பாதுகாப்புத் தரவும் உதவி செய்யவும் 50 படைவீரர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். நீங்கள் கட்டளை இட்டிருந்தால் நாங்கள் வருங்கால இராஜாவைக் காப்பாற்றியிருப்போமே என்றார். அதற்கு இராஜா விழுந்தது என் மகன் அல்லவா? எனக்கு உயிரான என் ஒரே அன்பு மகனைக் காப்பாற்ற நானே குதித்துவிட்டேன் என்றார்.

மன்னா! இதேபோல் தான் பிதாவனவரும் நம்மேல் வைத்த அன்பினால் நம்மைக் காப்பாற்ற தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்காக இவ்வுலகத்திற்கு அனுப்பினார்.

பிரியமானவர்களே! இதினால் தேவனுடைய அன்பு இன்னதென்று மன்னரைப்போன்று நாமும் அறிந்து கொள்வோம். நாம் கெட்டுப்போவதை அவர் விரும்பவில்லை. ஆம் தேவன் நம்மேல் வைத்த அவருடைய அளவில்லாத அன்பை நமக்குப் பரிசாக அளித்த நாளே கிறிஸ்துமஸ்.

அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்

**திருமதி ஷெரின் டியன்சன்**

Women's FELLOWSHIP




ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவான் 12:26).

## நாம் தேவனுக்கு ஊழியம் செய்வது என்றால் என்ன?

அவருடைய வழியைப் பின்பற்றி நடப்பதே நாம் முதலாவது அவருக்கு செய்கிற ஊழியமாகும். அவருடைய வழியில் நடக்காத எந்தவொரு மனிதனும் அவருக்கு ஊழியம் செய்கிறவனுமல்ல, அவனுடைய ஊழியத்தை தேவன் அங்கீகரிப்பதுமில்லை. மேலும் அவர் சொல்லுகிறார்: "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்". அப்படியானால் கிறிஸ்து எங்கே இருப்பார்? அவர் எப்படி நடக்கிறார்? கிறிஸ்து எப்பொழுதும் பிதாவை சார்ந்து, பிதாவின் சித்தப்படி செய்கிறவராக இருக்கிறார். ஆகவேதான் அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறவராக இருக்கிறார். ஆகவே ஒருவன் கிறிஸ்துவோடு ஐக்கியம் கொண்டிருப்பவன் பிதாவோடு வாசம் பண்ணுகிறான். பிதாவுக்கு ஏற்றக் காரியங்களை அவன் செய்கிறவனாகக் காணப்படுகிறான்.

ஆகவேதான் இயேசுகிறிஸ்து தம் வார்த்தையில்: **"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"** என்று சொல்லுகிறார். இந்த உலகத்தில் கர்த்தரைப் பின்பற்றுகிறவன் என்பவன் யார்? அவருக்காக வாழுவதும், அவருக்காக பணி செய்வதுமே அவனுடைய பிரதான நோக்கமாகக் காணப்படும். அவ்விதமாக வாழும் மனிதனின் வாழ்க்கையை பிதாவானவர் நிச்சயம் கனப்படுத்துவார். அவனை மேன்மைப்படுத்தி, நிலைப்படுத்துவார். அவன் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியாக மாற்றுவார். "எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ 3:24) என்று பவுல் சொல்லுகிறார். அவரைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லுபவன், அரைகுறையான மனதுடன் கர்த்தருடைய காரியங்களைச் செய்யமாட்டான். அவன் எப்பொழுதும் மனப்பூர்வமாய் தன்னை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, எந்தொரு காரியத்தையும் முழுமனதுடன் செய்வான். இவ்விதமான ஊழியம் உன்னில் காணப்படுகிறதா? இதுவே வேதம் போதிக்கும் ஊழியம்.

# Happy Birthday!

| | |
|---|---|
| 1-Dec | Mr. Jeffry Immanuel S/o Mr. Joel Renjith Kumar |
| 1-Dec | Mrs. Kalyani W/o Mr. Sankaran |
| 2-Dec | Ms. Angelin Sophia Nelson D/o Mr. Nelson Sopitha Raj |
| 4-Dec | Mr. Abishek S/o Mr. P. David Raj |
| 4-Dec | Mstr. Chris Gabriel S/o Mr. Daniel Duraisingh |
| 11-Dec | Mstr. Aaren Christo S/o Mr. Prem Jenifer |
| 12-Dec | Mr. Jayapradheep Christopher |
| 13-Dec | Mr. Richard S/o Mr. Ravindra |
| 16-Dec | Mr. Biju Mohan |
| 19-Dec | Mr. Augustin. J |
| 24-Dec | Mr. Rishon Yojit S/o Mr. Mr. Sathish Kumar.T |
| 25-Dec | Mr. Haryter Samuel S/o Mr. Heavin Heba |
| 25-Dec | Mr. Balaji Ramaiyan |
| 27-Dec | Mr. Shelbino Paul S/o Mr. Melbin Paul |
| 28-Dec | Mrs. Prasana W/o Mr. R Aruldhas |
| 31-Dec | Ms. M.Angeline Shally D/o Mr. Y.Mesiah Das |
| 31-Dec | Mr. Sathish Kumar.T |

*May God give you the desire of your heart and make all your plans succeed...*



# HAPPY ANNIVERSARY!

| | |
|---|---|
| 08 Dec | Mr. Alvin Kumar Asirmanns & Mrs. M.Subha |
| 13-Dec | Mr. Timotheus Dill Suresh & Mrs. Sathvi Lakshmi |
| 14-Dec | Mr. Thiyagu Murugaraj & Mrs. Jeniffer |
| 20-Dec | Mr. Joel Santhosh Kumar & Mrs. Helena |
| 27-Dec | Mr. Silvestor Solomon & Mrs. Manjushah |
| 27-Dec | Dr. Pradeev Raj & Mrs. Ramya Mergaratee |
| 28-Dec | Mr. Herchil Harish & Mrs. Blessy Grace Jonish |
| 28-Dec | Mr. Joel Ranjith Kumar & Mrs. Safeena |
| 29-Dec | Dr. G. Alexis Joy & Mrs. Padma Joy |
| 29-Dec | Mr. M. Nesamony & Mrs. Hepsi Bai |
| 29-Dec | Mr. P. David Raj & Mrs. Vasantha Selva Kumari |
| 29-Dec | Mr. Robert Wilson.T & Mrs. AjiKumari |
| 29-Dec | Mr. Derin Joy & Mrs. Fanny Esther |

*Be completely humble and gentle; be patient, bearing with one another in love. Make every effort to keep the unity of the Spirit through the bond of peace.*



KinderBeginner

KiDZ spot



# WORD SEARCH Primary



star



angel



Santa




candy cane



holly



elf



mistletoe



bell



reindeer




stocking

C
J A J
X C N W N
E Z X D R Q E
O L E
R H E A V
F E O T T X A
C I I L R H U N C
K V R N L E R Q G D V
E D Y E O C E
H P E Q M L A L M
S X L E M L M N U I B
P G A A R I W F D C S T F
F I G C C X J Q I Y I T C Y Q
L P E G I F T C T L V
S T O C K I N G A P E S A
N U U V H C X R O N G T T E V
K F D T L Z O C Y P E K O A E L F
R U R I U Z I V U O V J T E R C X H H
B J M N L
S A N T A
W Z J V V
B E L L X



candle



fireplace



wreath



gift

# CROSSWORD

## Christmas Joy

DIRECTIONS: Fill in the crossword grid with the provided words.

**4 Letter Words**
BELL
SNOW

**5 Letter Words**
ANGEL
COCOA
ELVES
HOLLY

**6 Letter Words**
LIGHTS
SLEIGH
TINSEL
WINTER
WREATH


**7 Letter Words**
CHIMNEY
GARLAND
PAGEANT
RUDOLPH
SNOWMAN

**8 Letter Words**
CAROLING
DECEMBER
EXCHANGE
ORNAMENT
PRESENTS
REINDEER
WRAPPING

**9 Letter Words**
CHESTNUTS
CHRISTMAS
EVERGREEN
FRUITCAKE
MISTLETOE
NORTH POLE

**10 Letter Words**
POINSETTIA
SANTA CLAUS

**11 Letter Word**
GINGERBREAD



Q A

SENIOR INTERMEDIATE

1. Can you list 5 names of Jesus found in the Bible and What are the meanings of the names Jesus and Emmanuel?

2. How old was Jesus when the wise men found him? Hint: Remember that the wise men saw His star at his birth and began following it. If the journey was 500 miles from Persia and Mesopotamia (around modern-day Iraq).

3. Write short note on What is Christmas for you and What is the main message of Christmas?

# Manna Participants- November

### KIDS COLOURING

JESIL BERNICE
HAZEL HARTLYN
REAGAN SHAN
CRASSLIN DEVONA
CHRIS GABRIEL
JANIA PRENI
JOHAN SANJO
JEMIMA ASHNI
JEREMIAH

### WORD SEARCH

JOHAN SANJO
JASON ERIC
AJINSHA
SHERINSHA
JEREMIAH
JONATHAN

### CROSS WORD

ROSHAN
AJINSHA
SHERINSHA
JASON ERIC
JOSHUA
JOSHIKA
JEREMIAH
JONATHAN

### BIBLE QUIZ


ROSHAN
SHELBINO
AJINSHA
SHERINSHA
JASON ERIC
JOSHUA
JOSHIKA
JONATHAN

Congratulations!




## DEC'21-QUESTIONS

1. பவுல் பேதுருவைக்காண எருசலேமில் எத்தனை நாள் தங்கியிருந்தார்?
2. யார் விருத்தசேதனம் பண்ண கட்டாயப்படுத்தப்படவில்லை?
3. ஆபிரகாமுக்கு எத்தனை குமாரர் என்று எழுதியிருக்கிறது?
4. எந்த வார்த்தை நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்?
5. அவனவன் தன் தன் ---------------------- சுமப்பானே?
6. எதைக்கொன்று ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்?
7. எந்த வரத்தினால் பவுல் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனர்?
8. திருச்சபை பக்தி விருத்தி அடைவதற்கு யாரையெல்லாம் ஏற்படுத்தினர்?
9. யார் கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தை சுதந்தரிக்க முடியாது?
10. யாருடன் நமக்குப் போராட்டம் உண்டு?




### நவம்பர் 'மாத விடைகள் / எழுதியவர்கள்

1. 2-கொரி: 2:15 | 2. 2-கொரி: 3:16 | 3. 2-கொரி: 4:3 | 4. 2-கொரி: 7:5
5. 2-கொரி: 8:6 | 6. 2-கொரி: 9:7 | 7. 2-கொரி: 10:18 | 8. 2-கொரி: 11:32
9. 2-கொரி: 12:7,8 | 10. 2-கொரி: 13:12

திருமதி.ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.பிப்லின் நெல்சன்,
திருமதி.ரோஸ்லின் பாலாஜி, செல்வி.அஜீன்ஷா, செல்வி.ஷெறின்ஷா,
திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ஹெலன் கம்பீரம்,
திருமதி.விவிலின் ஜுனா ஜெயக்குமார், திருமதி.ஜமுனா ராணி,
திருமதி.பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி.பமீலா டேனியல், திருமதி.ஹெப்சிபாய் நேசமணி,
செல்வி.ஜெரின் மேக்டலின், திருமதி.ஷெரின் டியென்ஷன், திருமதி.அகஸ்டா லாரன்ஸ்,
திருமதி.ஜெயந்தா ஜாண், திருமதி.அனிதா.எஸ்.ராஜன்

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**
**Your Name / Bible Quiz / Dec'21 | Sent to: csitcalain@gmail.com**



தென்னிந்திய தமிழ் திருச்சபை அல்யென்

# C.S.I. TAMIL PARISH ALAIN, UAE

| REGULAR SERVICE | BIBLE STUDY | CHILDRENS BIBILE SCHOOL |
|---|---|---|
| FRIDAY'S<br>6:30 PM – 7:30 PM<br>CHURCH<br>MAIN HALL<br><br>EVANGELICAL CHURCH CENTRE,<br>KENAD HOSPITAL CAMPUS,<br>ALAIN, UAE | WEDNESDAY'S<br>7:30 PM – 8:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: REV. S. P. BASKAR<br>056 7668 343 | FRIDAY'S<br>4:00 PM – 5:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. AUGUSTA LAWRANCE<br>056 641 1676 |
| **MEN'S FELLOWSHIP** | **WOMEN'S FELLOWSHIP** | **YOUTH FELLOWSHIP** |
| 2'ND THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. ASHOK KUMAR<br>050 842 9659 | 3'RD THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. SHALY MELBIN<br>056 394 1817 | 4'TH THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. SANTHOSH KUMAR<br>056 875 2723 |

## OTHER MEETINGS – VIA ZOOM

MONTHLY FASTING PRAYER: 1ST FRIDAY 11:AM TO 1:00PM

MONTH END/NEW MONTH STARTING PRAYER: (LAST DAY OF MONTH) 11:30 PM TO 12:30 PM

FOR MINISTRY DETAILS & ENQUIRES – PLEASE CONTACT

REV. S.P. BASKAR, THE PRESBYTER
CSI TAMIL PARISH ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org



# Merry Christmas

May every moment in your life be a blessing.
May you be showered with love and care.


**EDITOR**

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
EMAIL: CSITCALAIN@GMAIL.COM
WEB: CSITAMILPARISHALAIN.ORG



**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**